**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 17–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.3–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதிகள் ஆஜர் இல்லை . 1ம்பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.536/2022

பி.வா.சா.3 கதிர்வேல் த/பெ தாமோதரன்

<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை :–</u>

1. நான் நடத்தி வரும் சங்கீதா கலர்லேப் HD வீடியோ மற்றும் ஸ்டியோ எங்கு செயல்பட்டு வருகிறது என்றால் பெரியதேர் அருகில் நாமக்கல் மாவட்டத்தில் நடத்தி வந்தேன். தற்போது ஸ்டியோவை மூடி 3 வருடங்கள் ஆகும். நான் மேற்கண்ட ஸ்டியோவில் ஒர்கிங்க பார்ட்னராக இருந்தேன். அந்த வீடியோவில் 5 முதல் 6 நபர்கள் வேலை பார்த்து வந்தார்கள். மேற்கண்ட ஸ்டியோவில் ஒர்கிங் பார்ட்னராக இருந்தேன் என்பதற்க்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

2. மேற்படி ஸ்டியோ எப்போது ஆரம்பித்தேன் என்றால் ஆரம்பித்து ரொம்ப வருடங்கள் ஆகும். நான் ஒர்க்கிங் பார்ட்டுனராக 4 வருடங்களாக மேற்கண்ட ஸ்டியோவில் இருந்து வந்தேன். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள குறுந்தகடுவில் உள்ள படங்களை யார் பதிவு செய்தது என்றால் நான் தான் பதிவு செய்தேன். மேற்படி குறுந்தகடுவில் வீடியோ பதிவு செய்வதற்க்கு யார் எனக்கு ஆர்டர் கொடுத்தார் என்றால் ரமாதேவியின் தகப்பனார் ஆவார்.

3. ரமாதேவி துரையூர் ரோடு நாமக்கல் மாவட்டத்தில் வசித்து வருகிறார். பிரதிவாதிக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மேற்படி வீடியோ, போட்டோ ஆகியவைக்கு லட்சர் பராமரிக்க வேண்டும் என்றால் எனக்கு தெரியாது. ரமாதேவியின் திருமணம் 27.02.2018ம் தேதி நடந்தது. திருமணத்தில் எடுக்கும் வீடியோக்களை எடிட் செய்து, பேக்ரவுண்ட் மிசிக் கொடுத்து, கம்பூட்டார் கிராப்பிக்ஸ் செய்து தேவையில்லாத பகுதிகளை நீக்கி வாடிக்கையாளருக்கு குறுந்தகடாக தருவோம் என்றால் சரிதான். ரமாதேவியின் திருமணத்தை கேம்காடுவில் தான் பதிவு செய்தேன். எடிட் செய்யாத Raw Footage Memory card பதிவு செய்யப்பட்டும்.

4. மேலும் ரமாதேவியின் திருமண நிகழ்ச்சியை மேற்கண்ட Memory Card தான் பதிவு செய்யப்பட்டது. பிரதிவாதி  தாக்கல்செய்த பி.வா.சா.26 ஆவணமான குறுந்தகடு Raw Footage ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. Memory Card யை நான் தாக்கல் செய்யவில்லை. Memory Cardல் உள்ள Raw Footageயை கம்பூட்டர் மூலம் Download செய்து எடிட் செய்து ரமாதேவியிடம் DVD யாக கொடுத்ததை பெற்று நகல் செய்து அதை தான் பி.வா.சா.26 ஆவணமான குறுந்தகடாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் 11ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இதற்க்கு முன்பு வீடியோ பதிவு செய்தற்க்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேனா என்றால் இல்லை.

5. நான் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்பிரிவு 63 (4) BSA சான்றிதழ் யார் மூலம் தயார் செய்யப்பட்டது என்றால் கம்பியூட்டர் இன்ஜினியர் கண்ணன் மூலமாக தயார் செய்தேன். மேற்படி சான்றிதழை கண்ணன் தான் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. Hash value என்ன என்றால் எனக்கு தெரியும். மேற்படி Hash value கண்ணன் உதவியுடன் எடுக்கப்பட்டது. எப்படி Hash Value  எடுக்கப்பட்டது என்றால் MD 5 என்கிற Soft Ware மூலமாக input கொடுக்கும்போது ஒரு value Generate பண்ணி கொடுக்கும் அந்த Generate பண்ண valueவை மேற்கண்ட சான்றிதழில் காட்டியுள்ளேன்.

6. மேற்படி Hash Value ரமாதேவியிடம் இருக்கிற Hash Value வா அல்லது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள DVDயின் Hash Value வா என்றால் இரண்டும் ஒரே Hash Value வாக தான்இருக்கும். Memory Card ன் Hash value எங்கும் சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.26 ஆவணமான குறுந்தகடில் வாதி மற்றும்பிரதிவாதியின் தயார் வீடியோ மட்டும் உள்ளதா அல்லது திருமணநிகழ்வின் முழுவிடியோ உள்ளதா என்றால் திருமணநிகழ்வின் முழுவிடியோ உள்ளது.

7. ரமாதேவிக்கு திருமண நிகழ்வின் விடியோவை 20 நாட்கள் எடிட் செய்து DVD யாக கொடுத்தேன்.

மறுவிசாரணை:– இல்லை